**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 283/2021**

**PROSECUTION WITNESS NO. 1**

| | |
|---|---|
| **Name** : மகேஷ்குமார் | **Caste** : |
| **Father's/Husband Name** : சாமிநாதன் | **Religion** : **Hindu** |
| **Village** : கனரா வங்கி காலனி, உறையூர் | **Calling** : அரசு ஊழியர் |
| **Taluk** : திருச்சி | **Age** : **52/2023** |

**(Accused 1,2 Present. Accused 3 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.09.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. எம். உதயராணி**, தட்டச்சர்

<u>C.C.No. 283/2021 29.09.2023</u> **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்**: 12.00

**முதல் விசாரணை**:

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து திருநெல்வேலி தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேசனில் உதவி தர ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.07.2021 ஆம் தேதி காலை 04.30 மணியளவில் தஞ்சாவூர் செக்கடி தெருவில் நடந்து வந்துக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத 3 நபர்கள் எனது செல்போனையும் நான் கழுத்தில் அணிந்திருந்த வெள்ளி செயின் ஒன்றையும் பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். பின்னர் நான் தஞ்சாவூர் மேற்கு காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் மனுவை போலீசார் எழுதினார்கள். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சுமார் 6 மாதங்களுக்கு பிறகு போலீசார் போன் செய்து செல்போன் கிடைத்துவிட்டதாக தகவல் தெரிவித்தனர். நான் காவல்நிலையம் சென்று எனது பொருட்களை அடையாளம் காண்பித்தேன். அப்போது போலீசார் பிடித்து வைத்திருந்த நபர்களை நான் சரியாக பார்க்கவில்லை. பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு அளித்து தடயப்பொருட்களை இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றேன்.

**C.C.No. 283/2021 29.09.2023**

3. என்னிடம் காட்டப்படும் 2 புகைப்படங்களில் உள்ள செல்போன் மற்றும் ஒரு புகைப்படத்தில் உள்ள வெள்ளி செயின் என்னுடையதாகும். **(செல்போனிற்குண்டான 2 புகைப்படங்கள் அ.சா.பொ.1 ஆகவும், வெள்ளி செயினுக்குண்டான புகைப்படம் அ.சா.பொ.2 ஆகவும், அதனுடன் கூடிய வட்டத்தகடு அ.சா.பொ.3 ஆகும்.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

**4.** பொருட்கள் காணாமல் போனதாக சொல்லப்படும் அன்றையதினமே புகார் கொடுத்தேன். அன்றையதினத்திலே போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எதிரிகளின் அங்க அடையாளங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.